# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 06 புதன்கிழமை 23.10.2024 கதிர் 396







# ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கைது!

முன்னாள் அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ கைது செய்யப்பட்டுள்ளார். குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.



வாக்குமூலம் வழங்குவதற்காக இன்று காலை குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு வந்திருந்த போதே முன்னாள் அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹில்டன் ஹோட்டலில் இருந்து அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட சொகுசுக் கார் தொடர்பான விசாரணைகளுக்கு அமைவாகவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் வாக்குமூலம் வழங்கத் தயார் என நேற்று முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தனது சட்டத்தரணி ஊடாக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தார்.

இதேநேரம், முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் வகையில் கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் இன்று காலை பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவினால் தாக்கல் வழக்கு விசாரணை ஒன்றுக்கு முன்னலையாகத் தவறியதன் காரணமாகவே முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மீது பிடியாணை பிறப்பிக்கபட்டிருந்தது.

வரத்தக அமைச்சராக அவர் பதவி வகித்த காலத்தில் சதொச நிறுவனத்தின் பணியாளர்கள் 153 பேரை உத்தியோகபூர்வ கடமையிலிருந்து விலக்கி தனிப்பட்ட பணிகளில் ஈடுபடுத்திய குற்றச்சாட்டில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் வழக கொன்றுதாக்கல்செய்யப்பட்டிருந்தது.

அந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதிவாதியான முன்னாள் அமைச்சர் ஜோன் ஸ்டன் பெர்னாண்டோ முன்னிலையாகாத நிலையில் அவரைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப் படுத்துமாறு இந்த பிடியாணை பிறப்பிக்கபட்டிருந்தது. (ஐ-05)




## விடுமுறை இரத்து

கொழும்பு, அக். 23

இன்று முதல் எதிர் வரும் 14ஆம் திகதி வரை அனைத்துத் தபால் ஊழியர களின் விடுமுறைகளும் இரத்து செய்யப்படுவதாக தபால் திணைக்களம் அறிவித்துள்ளது.

பொதுத்தேர்தல்செயற்பாடு களுக்காக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார். (ஐ)

## இரத்மலானை புகையிரத மேடையில் துப்பாக்கிச்சூடு: ஒருவர் காயம்!



இரத்மலானை புகையிரத நிலையத்தில் இன்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காய மடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, புகையிரத நிலையத்தினுள் கொள்ளையர்கள் பிரவேசித்து, அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரை தாக்கி காயப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து இங்கு கடமையிலிருந்த புகையிரதத் திணைக்களப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் சந்தேக நபர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளார். இந்த துப்பாக்கிச் சூட்டில் சந்தேக நபர்களில் ஒருவர் காயமடைய ஏனையவர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

சந்தேக நபர்களின் தாக்குதலில் காயமடைந்த ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தரும், துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சந்தேக நபரும் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவித்துள்ள பொலீஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## சுற்றுலா மையங்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் அமெரிக்கப் பிரஜைகளுக்குத் தூதரகம் எச்சரிக்கை

கொழும்பு, அக். 23

இலங்கையிலுள்ள அமெரிக்க பிரஜைகள் அறுகம்பைப் பகுதிக்கு மறு அறிவித்தல் வரை சுற்றுலா செல்வதைத் தவிர்க்குமாறு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் எச்சரித்துள்ளது.

அறுகம்பையில் உள்ள பிரபலமான சுற்றுலாத் தலங்களை இலக்கு வைத்துத் தாக்குதல் நடத்தப்படலாம் என நம்பத்தகுந்த முறையில் தகவல் கிடைத்துள்ளதால் முன்னெச்சரிக்கையாக இந்த பயணக் கட்டுப்பாட்டை விதித்துள்ளதாக

2➤

## அறுகம்பேயில் கடும் பாதுகாப்பு

கொழும்பு, அக். 23

அறுகம்பே பிரதேசத்தில் பாதுகாப்பை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அறுகம்பே மற்றும் பொத்துவில் பிரதேசங்களில் இஸ்ரேலியர்கள் அதிகமாக அலைச்சறுக்கு விளையாட்டுகளில் ஈடுபட்டு வருவதாகவும், அவர்களுக்கு ஆபத்து நேரிடலாம் எனக் கடந்த சில நாள்களுக்கு முன்னர்

தமக்குக் தகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார். அதனால், அறுகம்பை சுற்றுலாப் பகுதியின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக சுமார் 500 பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் அனுப்பப்பட்டுள்ளனர் என்றும், அந்தப் பகுதியின் பாதுகாப்பைப் பலப்படுத்துவது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரும் ஏனைய பாதுகாப்பு நிறுவனங்களும் அவதானம் செலுத்தி வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட டார்.

இதேவேளை, கொழும்பில் அல்லது வேறு எந்த பிரதேசத்திலும் இவ்வாறான விபத்து இடம்பெற்றதாக புலனாய்வுத் தகவல்கள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை எனவும், மக்கள் தேவையற்ற விதத்தில் அச்சப்படத் தேவை இல்லை எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவ பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-05)

## அறுகம்பே செல்வதைத் தவிர்க்குமாறு ஐக்கிய இராச்சியமும் அறிவுறுத்து!

கொழும்பு, அக். 23

அறுகம்பே சுற்றுலாத் தலத்துக்கு செல்ல வேண்டாம் என அமெரிக்கத் தூதரகம் இந்நாட்டுப் பிரஜைகளுக்கு வழங்கிய பயண எச்சரிக்கையைத் தொடர்ந்து, ஐக்கிய இராச்சியமும் தமது இலங்கைக்கான பயண ஆலோசனைகளைப் புதுப்பித்துள்ளது.

இது தொடர்பிலான பயண எச்சரிக்கைக் குறிப்பொன்றினை இலங்கையிலுள்ள பிரித்தானிய உயர் ஸ்தனிகராலயம் வெளியிட்டுள்ளது. அதன்படி, அறுகம்பே பகுதிக்கு விஜயம் செய்வதைத் தவிர்க்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

## வன்னி தேர்தல் மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்ட வேட்புமனுவை ஏற்குமாறு உயர்நீதிமன்று உத்தரவு

கொழும்பு, அக். 23

நவம்பர் 14ஆம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்காக வன்னி தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயக தேசிய கூட்டணி தாக்கல் செய்த வேட்புமனுவை நிராகரிப்பதற்கு, மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி மேற்கொண்ட தீர்மானத்தை வலுவற்றதாக்கி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தங்களது வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமையை ஆட்சேபித்து, ஜனநாயக தேசியக் கூட்டமைப்பு தாக்கல் செய்த மனு திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. பிரீத்தி பத்மன் சூரசேன, ஷிரான் குணரத்ன மற்றும் அர்ஜ/ன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் மனு மீதான விசாரணை இடம்பெற்றது. விசாரணையின் போது, பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான மேலதிக மன்றாடியார் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆலோசனையைப் பெற்றதன் பின்னர் சமர்ப்பணங்களை முன்வைப்பதற்குக் கால அவகாசத்தைக் கோரினார். அதனை ஏற்றுக்கொண்ட மன்று, குறித்த மனுவை இன்று பரிசீலிப்பதற்கு உத்தரவிடப்பட்டது.

அதன்படி, ஜனநாயக தேசிய கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்புமனுக்கள் தெரிவத்தாட்சி அதிகாரியால் ஏற்கப்பட வேண்டுமென உயர்நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

## சுற்றுலா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சந்தேகத்துக்கு இடமான செயற்பாடுகள் அல்லது அவசர நிலைமைகள் குறித்து 119 என்ற இலக்கத்துக்கு அழைப்பை மேற்கொள்ளுமாறு இலங்கையிலுள்ள தமது பிரஜைகளை அமெரிக்கத் தூதரகம் கோரியுள்ளது.

இதேவேளை, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு விசேட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகப் பொலீஸ் ஊடகப் பிரிவு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இதற்கமைய, மத்திய கிழக்கு உட்படக் கிழக்கு ஐரோப்பியாவில் ஏற்பட்டுள்ள யுத்தத்தைக் கருத்திற்கொண்டு, இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு என்பன அறிவுறுத்தியுள்ளன.

இதன்படி, எந்தவொரு சுற்றுலாப் பயணியும் பாதுகாப்பு தொடர்பில் 1997 என்ற இலக்கத்துக்குத் தகவல் வழங்க முடியும் என பொலீஸ் ஊடகப்பிரிவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-12)









“நாட்டைக் கட்டியெழுப்பும் நாம் ஒன்றாக திசைகாட்டிக்கு” எனும் தொனிப்பொருளில் தேசிய மக்கள் சக்தியினால் முன்னெடுக்கப்படும் நாடு தழுவிய பரப்புரைத் தொடரில் இன்று திருகோணமலையில் இடம்பெற்ற கூட்டத்தின் சில காட்சிகள் (ஐ)



# தேங்காய் விற்பனை தொடர்பில் முக்கிய அறிவிப்பு



கொழும்பு, அக். 23

நிலவும் தேங்காய் விலையை கருத்திற்கொண்டு நுகர்வோர் எதிர நோக்கும் சிரமங்களுக்கு தீர்வாக நடமாடும் விற்பனை திட்டத்தை ஆரம்பிக்க தென்னை பயிர்ச்செய்கை சபை ஏற்பாடு செய்துள்ளது.

அதன் முதற்கட்டமாக கொழும்பு இன்று (23ஆம் திகதி) ஸ்ரீ ஜயவர்தன புர கோட்டே, கடுவெல மாநகர சபைகளை அடிப்படையாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்போது, ஒரு தேங்காய், 100 முதல், 120 ரூபாய் வரை, வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட உள்ளது. கொழும்பு பிரதேசத்தில் உள்ள வெலிக்கடை பொலிஸ் நிலையத்திற்கு அருகிலும், கிருலப்பனை பொது சந்தை மற்றும் நிதி அமைச்சின் வளாகத்திற்கு அருகில் நடமாடும் லொறிகள் மூலம் விநியோகம் செய்யப்பட உள்ளது.

இதன்படி, நாளொன்றுக்கு பத்தாயிரம் (10,000) தேங்காய்களை சந்தைக்கு சேர்க்கப்படும் என்றும், பின்னர் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில், ஒரு நாளைக்கு (5,000) தேங்காய்கள் படிப்படியாக சந்தைக்கு சேர்க்கப்படும் மற்றும் வாரத்திற்கு 15,000 தேங்காய்கள் அனுப்பப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குருநாகல் பெருந்தோட்ட நிறுவனம் ஒவ்வொரு நாளும் 1500 தேங்காய்களை வழங்க ஏற்பாடு செய்துள்ளதுடன், ஹலவட தோட்ட நிறுவனம் நாளை முதல் தினமும் 3000 தேங்காய்களை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

## வெளிநாட்டவர்கள் 10 பேருக்கு ஆயுள் தண்டனை!

கொழும்பு, அக். 23

நீர்கொழும்பு மேல் நீதி மன்றம்பத்து வெளிநாட்டவர்களுக்கு ஆயுள் தண்டனை விதித்துள்ளது. 2016 ஆம்ஆண்டு 146 கிலோகிராம் ஹெரோயின் வைத்திருந்தமை மற்றும் கடத்தியதற்காக குறித்த 10 வெளிநாட்டவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுகள்பதிவு செய்யப்பட்டன. அதேவேளை இலங்கையில் ஒன்பது ஈரானியர்கள் மற்றும் ஒரு பாகிஸ்தானியருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ஐ)








# மிதி வெடி

ஒரு பொய்யைச் சென்னால் அதை மறைக்க ஓராயிரம் பொய் செல்ல வேணும் எண்டு சொல்லுறது உண்மை தான் பாருங்கோ… இலங்கை மின்சார சபையின்ர “என்ஜினியர்” ஒருத்தர் “சோலர்” அனுமதி குடுக்கிறதில திருகுதாளம் பண்ணிப்போட்டு அதை மறைக்கிறதுக்கு ஒரு பொய் சொல்லி … அதை மறைக்கப் பல பொய் சொல்லி இப்ப எக்கச்சக்கமா மாட்டுப்பட்டுப் போய் நிக்கிறாராம்.

“சோலர்” அனுமதி குடுக்கிறதில முறைகேடு நடக்குது எண்டு ஒருத்தர் ரெண்டு பேர் முறைப்பாடு சொல்ல அவையெல்லாரையும் அதட்டி, உருட்டி அடக்கி வைச்சுப் போட்டார். ஜனாதிபதி செயலகம் வரை “கேஸ்” போன உடன குடுக்காத “கிளியரன்ஸ்”ஐ குடுத்த மாதிரி ஜனாதிபதி செயலகத்துக்குப் பதில் போட, சம்பந்தப்பட்டவர் தனக்கு எதுவுமே தரப்படேல்ல எண்டு “ப்ரூவ்” பண்ணினதால கொஞ்சம் வெலவெலத்துப் போய் இருக்கினம்.

“தன் முயற்சியில் சற்றும் மனந்தளராத விக்கிரமாதித்தன்” போல அந்தாளும், ஜனாதிபதி செயலகம், மின்சக்தி அமைச்சு, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு எண்டு எல்லாடமும் போய் முறைப்பாடு செய்து, அவற்றை முறைப்பாட்டில நியாயம் இருக்கிறதால அவர் விண்ணப்பிச்ச படி குடுக்கச் சொல்லியிருக்கினமாம்.

என்னதான் செய்தாலும் - எங்க தான் போனாலும், ஆர் எனக்குச் சொன்னாலும் அவருக்கு நான் ஒரு “கிளியரன்ஸ்” கூடக் குடுக்க மாட்டன் எண்டு வடக்குக்கான பொறியியலாளர் அலுவலகத்தில நடந்த “என்ஜினியர்” மாரின்ட கூட்டத்தில தெனாவெட்டாச் சொல்லி இருக்கிறார். அந்தக் “கேஸ்” அப்பிடியே இருக்க… யாழ்ப்பாணத்தில இருந்து அதே விசியத்துக்கு வெவ்வேறாக் கனக்க முறைப்பாடுகள் போயிருக்குது போல…

அதிலும் குறிப்பா வலிகாமம் பகுதியில முன்னாள் பிரதேச சபைத் தவிசாளர் ஒருத்தருக்கு கட்டி முடிக்கப்படாத வீட்டுக்கு “கிளியரன்ஸ்” குடுத்த விசியமும், சண்டிலிப்பாய்ச் சந்தியில அனுமதி பெறப்ப டாத கடைக் கட்டிடம் ஒண்டுக்குக் “கிளியரன்ஸ்” குடுத்த விசியமும் பெரிசாப் போச்சுது போல….

சுன்னாகத்தில போன வருசம் நவம்பர் மாசம் விண்ணப்பிச்சவருக்குக் “கிளியரன்ஸ்” குடுக்காமல், இந்தவருசம் ஏப்பிரலில விண்ணப்பிச்சவரிட்டை அதை, இதை வாங்கிக் கொண்டு “கிளியரன்ஸ்” குடுத்திருக்கினம். முந்தி விண்ணப்பிச்சவர் போய் விசாரிக்க அவற்றை விண்ணப்பத்தைக் காணேல்ல எண்டு கைவிரிச்சிருக்கினம். அந்தப் பெடியன் கொஞ்சம் பிடிச்சிராவி போல இருக்குது. தன்னட்டை இருந்த காசு கட்டின துண்டில இருந்து எல்லாத்தையும் திரும்பக் கொண்டு போய்க் காட்டியிருக்குது.

வழமை போல “பீடரில” இடமில்லை… நீங்க “ட்ரானஸ்போமர்” க்கு 11 லட்சம் தந்தால் “கிளியரன்ஸ்” தரலாம் எண்டிருக்கினம். பொடியன் விடேல்ல… ஜனாதிபதி செயலகம், மின்சக்தி அமைச்சு, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு எண்டு எல்லாடமும் போய் முறைப்பாடு செய்திருக்குது…

அங்க, இங்கயெண்டு சுத்தி முறைப்பாடு இப்ப மகாணப் பொறியியலாளர் அலுவலகத்துக்கு வந்திருக்குதாம்… தலைவரின்ர பெயருள்ள அந்தப் பெயருள்ள அந்தப் பொறியியலாளர், (சிவ)லிங்க வடிவான இந்தப் பொறியியலாளருக்கு உடனடியா “அட்டெனட்” பண்ணச் சொல்லி உத்தரவு போட்டிருக்கிறாராம்… என்னதான் செய்தாலும் - எங்க தான் போனாலும், ஆர் எனக்குச் சொன்னாலும் அவருக்கு நான் ஒரு “கிளியரன்ஸ்” கூடக் குடுக்க மாட்டன் எண்டு சொல்லுறவர், இனி “நான் அவை ஒருத்தருக்கும் “கிளியரன்ஸ்” குடுக்க மாட்டன் எண்டு பன்மையில தான் சொல்லவேணும் போல..?

இதுக்குள்ள இன்னுமொரு விசியம் வேற கழுத்துக்கு நேராக் கத்தியா வந்து நிக்குது…. வடக்கில.. அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில “சேலர் கிளியரன்ஸ்”க்கு விண்ணப்பிச்ச ஆக்களின்ர விவரம், விண்ணப்பிச்ச திகதி, விண்ணப்பிச்ச ஒழுங்கு, “கிளியரன்ஸ்” குடுத்த திகதி, “பீடர்” கொள்ளளவு எண்டு விலாவாரியாக் கேட்டு கொழும்பில இருக்கிற மின்சார சபையிட்ட கேட்டு மூண்டு பேர் தகவல் அறியும் உரிமை விண்ணப்பத்துக்கும் பதில் குடுக்காததால, அதுவும் வழக்காகி நீதிமன்றத்துக்குப் போகுது போல… வாற மாசம் 08 ஆம் திகதி “கேஸ்”….

என்னதான் நடக்குதெண்டு பொறுத்திருந்து தான் பாப்பமே…. ஒரு பொய் சொல்லப் போய்.. இப்ப எத்தின பொய் சொல்ல வேண்டிக்கிடககுது…?


–நரமுனி–



## நாடாளுமன்றத் தேர்தல் 2024



# சங்கு வேட்பாளர்களுக்கு கல்முனையில் வரவேற்பு!





( வி.ரி. சகாதேவராஜா)

சங்கு சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களின் வெற்றிக்காக கல்முனை புலவிப் பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடு இடம்பெற்றதுடன், வேட்பாளர்களுக்கு அமோக வரவேற்பும் அளிக்கப்பட்டது.

உவெஸ்லியன் 78 - 82 சமூக அமைப்பின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் நாவிதன்வெளி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான சோ. புஷ்பராசா, மற்றும் கி. லிங்கேஸ்வரன .த.துரைசிங்கம் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்தி வரவேற்பு அளிக்கப்பட்டது.

நிகழ்வில் கல்முனை புத்திஜீவிகள் வெஸ்லியன் 78 - 82 சமூக அமைப்பின் உறுப்பினர்கள், உட்பட பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து கல்முனை பிரதான வீதிகளில் உள்ள வியாபார ஸ்தலங்களுக்கு வேட்பாளர்கள் நேரடியாகச் சென்று பரப்புரையில் ஈடுபட்டனர். (ஐ)








இலங்கைத்தமிழ் அரசு கட்சியினர் திருகோணமலை மனையா வெளி வல்லவசக்தி அம்மன் ஆலய ஆலயத்தில் இன்று காவை விசேட பூஜை, வழிபாடுகளுடன் பொதுத் தேர்தல் பரப்புரைப் பணிகளில் ஈடுபட்டனர். திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னால் நாடாளுமன்ற உறுப்பினருமான சண்முகம் குகதாசன் தலைமையில் பரப்புரைப் பணிகள் இடம்பெற்றன. (படங்கள் : ஹஸ்பர் ஏ.எச்°)


' எமது மக்களுக்கான எனது பணி மேலும்
உத்வேகமாக தொடர்ந்திட ஆதரவளிப்பீர் '
3
தமிழர் விடுதலை கூட்டணி
வன்னி தேர்தல் தொகுதி
செ.சந்திரகுமார்
(கண்ணன்)
சமூக தொண்டன், தமிழ் விருட்சத்தின் ஸ்தாபகர்
வீடுகள்
நிரந்தர கல் வீடுகள் - 28
வீடு திருத்த உதவிகள் - 15
தற்காலிக வீடுகள் - 10
தற்காலிக வீடுகளுக்கு தகரங்கள் வழங்கி புனரமைத்தமை - 45
கிணறுகள்
பொதுக் கிணறு - 02
குழாய்க் கிணறுகள் - 22
மருத்துவ உதவிகள்
மருத்துவ உதவிகள் இதுவரை - 54
கல்வி
கற்றல் உபகரணங்கள் வழங்கியமை இதுவரை - 18,220
பாடசாலைகளுக்கான கல்வி உதவிகள் இதுவரை- 42
பாடசாலைகளுக்கான பயிற்சி கருத்தரங்கு, வளவாளர் கொடுப்பனவு இதுவரை - 28
துவிச்சக்கர வண்டிகள் மாணவர்கள், பெண் - தலைமைத்துவ பெண்கள் இதுவரை -320
மாதாந்த கல்வி உதவிகள் இதுவரை - 380
அறநெறி பாடசாலை கட்டிடம் - 02
உலர் உணவுப் பொதிகள்
உலர் உணவுப் பொதிகள் இதுவரை - 19,800
கொரானா கால மக்கள் துயர்துடைப்பு உலர் உணவு பொதிகள் வழங்கியமை- 3800
பொங்கற் பானைகள் இதுவரை - 9100
விளையாட்டு
விளையாட்டு நிகழ்வுக்கான அனுசரணை இதுவரை- 60
விளையாட்டு நிகழ்வுக்கு வீரர்கள் வெளிநாடு செல்வதற்கான அனுசரணை இதுவரை- 10
வாழ்வாதார உதவிகள்
பெண் தலைமைத்துவ குடும்பங்கள், முன்னாள் போராளி இதுவரை - 310
பொது நிகழ்வுகள்
கலாசார நிகழ்வுகளுக்கான அனுசரணை இதுவரை- 78
கோவில் அன்னதானம், இல்லங்களுக்கான மதிய உணவு இதுவரை - 1250
இதை விட வவுனியாவிலுள்ள பெரியார் சிலை விழாக்கள், பண்பாட்டு விழாக்கள், சிரமதானம், இரத்ததான முகாம் மற்றும் சக மதத்தினரின் விழாக்கள், நிகழ்வுகள் போன்றவற்றில் கலந்து கொள்ளலும், அனுசரணை வழங்கலும்.
உங்கள் 'அன்பு' எனும் 3 எழுத்தை
'வாக்கு' எனும் 3 எழுத்தாக்கி என்னை
'வெற்றி' எனும் 3 எழுத்தை
அடைய செய்வீர்கள் என்ற நம்பிக்கையில்
உங்களால் நான்,
உங்களுக்காக நான்
எங்கள் சின்னம்
X
3


நாடாளுமன்றத் தேர்தல் - 2024
யாழ் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சமூக தொழின் முனைவர், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்
கௌரி
B.Sc, LL.B (Hons) (UK)
4
தமிழர் இருப்பு,
பொருளாதார
அபிவிருத்தி
உங்களில் ஒருத்தி பாராளுமன்றம் நோக்கி
தமிழர் விடுதலைக் கூட்டணி
1 2 3 4 5 6 7 8 9


நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)
கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய
மேட்டுக்காணியும்
பண்ணை வீடும்
பொழுதுபோக்குகளும்...!
எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த
இயற்கை சூழலில்
ஓய்வுகால வீட்டிற்கான
காணித் துண்டுகள்...!
மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும்
அருகருகே அமைந்த
மீன்பாடும் தேன்நாட்டில்
விடுமுறை வீட்டிற்கு...!
அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில்
இளிர்ந்த பிரதேசத்தில்
வாசனைத் திரவியமும்
சுற்றுலா விடுதியும்...!
காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் வெள்ளிவிழா நிகழ்வுகள் சனியன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், அக். 23

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகமுகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு நாள் நிகழ்வுகள் எதிர்வரும்26ஆம்திகதி, சனிக்கிழமைபிற்பகல் முகாமைத்துவக்கற்கைகள் வணிகபீட கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது 50ஆவதுவருடநிறைவில்பொன்விழாக்காணும் சமகாலத்தில், முகாமைத்துவ கற்கைகள் மற்றும்வணிகபீடம்தனதுவெள்ளிவிழாவைக் கொண்டாடுகிறது.

1974ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட போது, கலைப்பீடத்துடன் இணைந்துசெயற்பட்டு வந்த வணிகத்துறை, 1999ஆம் ஆண்டு ஐந்தாவது தனிப்பீடமாக இயங்கத் தொடங்கியது. இப்பீடம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இலங்கையில் மாத்திரமன்றி உலகளாவிய ரீதியில் வணிக முகாமைத்துவக்கல்விக்கு பெரும்பங்களிப்பை வழங்கி வருகிறது.

பீடத்திலிருந்துபட்டம்பெற்றுவெளியேறிய மாணவர்கள் இலங்கையில் மாத்திரமன்றி உலகளாவிய ரீதியிலும் பல்வேறு பெரும் பதவிகளை வகித்துவருகின்றனர். இப் பீடமானது பல்வேறு பெரும் பதவிகளை வகிக்கும் மாணவர்களை உருவாக்கிய அதேவேளை சமூகத்திற்கு பல்வேறு பங்களிப்புகளையும் நல்கி வந்துள்ளது.

முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடம் காலத்தின் தேவைகருதி 1999 இலிருந்து வியாபார நிர்வாகமாணியில் கணக்கியல், நிதிமுகாமைத்துவம், மனிதவளம், சந்தைப்படுத்தல் துறைகளில் சிறப்புபட்டத்தை வழங்கிவரும்அதேவேளை கடந்த ஆண்டிலிருந்து சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் சிறப்புப் பட்டத்துக்கான கற்கைநெறியையும் ஆரம்பித்துள்ளதுடன், வணிகமாணியில் கணிக்கியலும் நிதியும் மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பவற்றில் சிறப்புப் பட்டத்தினையும் வழங்கி வருகின்றது. உள்வாரி மாணவர்களுக்கான இத்தகைய சிறப்புப்பட்டங்கள் மாத்திரமன்றி ஆயிரக்கணக்கான வெளிவாரி மாண வர்களுக்கு வணிகமாணி மற்றும் வியாபார முகாமைத்துவமாணி பட்டங்களையும் வழங்கிய பெருமை இந்த பீடத்தையே சாரும்.

உள்வாரியாகப் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோர் தொழில் புரிந்து கொண்டே தமது கல்வியை வெளிவாரியாகத் தொடரக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்குகின்றமை ஒரு வரப்பிரசாதமாகும்.

(இ-09)







## மாடியில் இருந்து வீழ்ந்த மாணவன் மரணம்!



கொழும்பு, அக். 23

களனிப்பல்கலைக்கழகத்தின் சீ.டபிள்யூ. கன்னங்கார மாணவர் விடுதியின் நான்காம் மாடியில் இருந்து விழுந்த மாணவன் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இன்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் களனிப் பல்கலைக்கழகத்தின் நான்காம் வருட மாணனான பிரின்ஸ் ராஜூ பண்டார என்பவரே மரணமடைந்துள்ளதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்த மாணவன் அளவுக்கு அதிகமாக மது அருந்தியிருந்தமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும், குறித்த மாணவன் அளவுக்கு அதிகமாக மது அருந்தி இருந்ததால் ஜன்னல் ஊடாகக் கீழே தவறி விழுந்து உயிரிழந்திருக்கலாம் எனச் பொலிஸார் சந்தேகிப்பதாகவும் பொலீஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.10.2024 இல் வெளியிடப்பெற்றது.